ஓம்
ஸ்ரீகுருப்யோ நம:



# ஸ்ரீகுருபூர்ணிமா
# சாதுர்மாஸ்ய வ்ரதம்


● ஸ்ரீப்ரஜ்ஞா பப்ளிகேஷன்ஸ், வேதபுரீ, தேனி-625 531.

| | | |
|---|---|---|
| புத்தகத்தின் பெயர் | : | ஸ்ரீகுருபூர்ணிமா<br>சாதுர்மாஸ்ய வ்ரதம் |
| முதற்பதிப்பு | : | ஜூலை, 2021 |
| உரிமை | : | வேதாந்த சாஸ்த்ர ப்ரசார ட்ரஸ்ட்<br>(பதிவு:226/1992) |
| மொழி | : | தமிழ் |
| புத்தக அளவு | : | 1/8 டெம்மி |
| மொத்த பக்கங்கள் | : | 33 |
| எழுத்து அளவு | : | 12 புள்ளிகள் Shree-TAM7-0803<br>16 புள்ளிகள் Shree-DEV7-0709 |
| வெளியீடு | : | **ஸ்ரீப்ரஜ்ஞா பதிப்பகம்**<br>வேதாந்த சாஸ்த்ர ப்ரசார ட்ரஸ்ட்<br>(பதிவு:226/1992)<br>ஸ்ரீஸ்வாமீ சித்பவாநந்த ஆச்ரமம்<br>வேதபுரீ, தேனி-625 531.<br>Swamiomkarananda@gmail.com<br>www.vedaneri.org |



**24.07.2021 சனிக்கிழமை முதல்**
**20.09.2021 திங்கட்கிழமை வரை**
**தேனி, வேதபுரீ,**
**ஸ்ரீஸ்வாமீ சித்பவாநந்த ஆச்ரமத்தில்**
**நடைபெற்ற**
**ஸ்ரீசாதுர்மாஸ்ய வ்ரத தொடக்க காலத்தில்**
**ஸ்ரீகுருபூர்ணிமா தினத்தன்று**
**24.07.2021 அன்று வெளியிடப்பட்டது.**





# ஸந்யாஸிகளின் சாதுர்மாஸ்ய வ்ரதம்

## காஞ்சி காமகோடி ஜகத்குரு ஸ்ரீசந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதீ மஹாஸ்வாமிகள்

(1957 ம் ஆண்டு, சென்னையில் ஆற்றிய உரையிலிருந்து...)

ஒவ்வொரு ஆச்ரமத்தில் உள்ளவர்களுக்கும் தனித்தனியே முக்கிய கடமை அல்லது தர்மம் இருக்கிறது. அதன்படி ஸந்யாஸ ஆச்ரமம் மேற்கொண்டுள்ள துறவிகள் நீண்ட காலம் தொடர்ந்து ஓரிடத்தில் இருக்கக்கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவர் பரிவ்ராஜகராக, ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு பயணித்துக் கொண்டே இருக்க வேண்டும்.

துறவியானவர் பல இடங்களுக்கும் சென்றபடி, தன்னுடைய சிஷ்யர்களைக் கண்டு அவர்களது ஆன்மிகத் தேவைகளை நிறைவேற்றியபடி, சாஸ்த்ர நெறிப்படி அவர்கள் வாழ வழிகாட்டிக் கொண்டிருக்க வேண்டும்.

இவ்வாறு ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு இடையறாது பயணிப்பதால், த்யாநம் முதலான ஆன்மிக ஸாதனைகளைச் செய்வதற்கும், ஆத்ம ஞானத்தைப் பெற்று மெய்ப்பொருள் தத்துவத்தில் நிலைத்திருப்பதற்கும் அவர்களுக்கு கிடைக்கும் நேரம் குறைவாக இருக்கும். அதனால் ஆடி மாதத்தின் பௌர்ணமியிலிருந்து, சாதுர்மாஸ்ய வ்ரத காலத்தில் துறவிகள் ஓரிடத்தில் தங்கியிருக்க சாஸ்த்ரம் அனுமதிக்கிறது. **ப்ராவ்ருத காலம்** எனப்படும் மழைக்காலத்தில் இந்த வ்ரதம் அநுஷ்டிக்கப்படுகிறது.

மழைக்காலத்தில் இந்த வ்ரதமானது அநுஷ்டிக்கப்படுவதற்கு ஒரு முக்கிய காரணம் இருக்கிறது. ஸந்யாஸ ஆச்ரமம், எவ்வுயிருக்கும் தீங்கு செய்யாத அஹிம்ஸையை உள்ளடக்கியது. மழைக்காலத்தில் வழி முழுவதும் புழு பூச்சி முதலிய பல உயிர்கள் பெருகியிருக்கும். அந்த சமயத்தில் பயணம் செய்வதால், புழு பூச்சி முதலிய சிற்றுயிர்களுக்கு ஹிம்ஸை உண்டாகும். அதனால்தான் சாதுர்மாஸ்ய வ்ரத

ஸங்கல்பத்தின்போது, கூடியிருக்கும் அன்பர்களை நோக்கி, துறவியானவர் மழைக்காலம் தொடங்கிவிட்டதாகவும், (ப்ராணி ஸங்குலம்) எங்கும் சிற்றுயிர்கள் பெருகியிருப்பதாகவும், அங்குள்ளவர்களுக்கு கஷ்டம் இல்லையெனில் தாம் அங்கேயே தங்கியிருக்க விரும்புவதாகவும் தெரிவிக்கிறார். இதனைக் கேட்கும் அன்பர்கள், ஸேவை செய்யும் பாக்யம் தங்களுக்குக் கிடைத்திருப்பதை எண்ணி மகிழ்ந்து, அவரை அங்கேயே ஸௌகர்யமாக தங்கியிருக்கும்படி வேண்டிக் கொண்டு, தங்களால் இயன்ற அளவு அவருக்கு ஸேவை செய்வதாகவும் உறுதியளிக்கின்றனர்.

ஹிந்து மதம், புத்த மதம், ஜைந மதம் ஆகிய மூன்று மதத்தினருக்கும் பொதுவானது இந்த சாதுர்மாஸ்ய வ்ரதம். இரண்டாயிரம் வருடங்களுக்கு முன் எழுதப்பட்ட அசோகர் கால கல்வெட்டுகளில், சாதுர்மாஸ்ய வ்ரதம், பெயருக்கேற்ற -படி நான்கு மாதங்கள் கடைப்பிடிக்கப்பட்டதாகக் கூறப்பட்டிருக்கிறது. இது எப்பொழுது இரண்டு மாதங்களாகக் குறைக்கப்பட்டது என்று தெரியவில்லை. (பக்ஷோவை மாஸா:)என்ற விதிக்கேற்ப இந்த வ்ரதம் அநுஷ்டிக்கப்படும் காலம் நான்கு மாதங்கள் என்பது நான்கு பக்ஷங்களாக குறைக்கப்பட்டுவிட்டது.

ஸந்யாஸி ஒருவர் வ்யாஸ பூஜை செய்த பிறகு, சாதுர்மாஸ்ய வ்ரத ஸங்கல்பம் எடுத்துக்கொள்கிறார். பிற ஆச்ரமத்தினருக்கு உபாகர்மா போல, ஸந்யாஸிகளுக்கு இது முக்கியமான வ்ரதமாகும். வேத மந்த்ரங்களை தவறாக உச்சரிப்பதால், அவற்றின் பலன் குறைந்துவிடுகிறது. அதுபோன்ற குற்றங்களை நீக்கி, மீண்டும் வேத மந்த்ரங்களுக்கு வலுசேர்ப்பதே உபாகர்மாவின் நோக்கம். தமது தெய்வீக சக்தியால், வேத மந்த்ரங்களை உணர்ந்து உலகுக்கு வழங்கிய பகவான் ஸ்ரீவேத வ்யாஸரையும், ரிஷிகளையும் வழிபட்ட பிறகு அன்றைய தினம் வேதத்தை ஓதுகின்றனர்.

அதேபோன்று துறவிகள் த்யாநம், யோகம், ஆத்மவிசாரம் முதலிய ஸாதனைகளைத் தொடங்குவதற்குமுன் ஸ்ரீவேத வ்யாஸரையும், ஆத்ம ஞானத்தை வழங்கிய குருமார்களையும் வழிபடுகின்றனர்.

வ்யாஸ பூஜை அன்று ஸ்ரீவேத வ்யாஸர் மட்டுமல்ல, அறுவகை குருமார்களும் (மூலபுருஷர்கள்) வழிபடப்படுகின்றனர்.

க்ருஷ்ண பஞ்சகம் எனப்படும் முதல் பிரிவில் ஸ்ரீக்ருஷ்ணர், வாஸுதேவர், ப்ரத்யும்நர், அநிருத்தர், ஸங்கர்ஷணர் ஆகியோர் வழிபடப்படுகின்றனர்.

வ்யாஸ பஞ்சகம் எனப்படும் இரண்டாவது பிரிவில் ஸ்ரீவ்யாஸர், ஸ்ரீபைலர், ஸ்ரீவைசம்பாயநர், ஸ்ரீஜைமிநி, ஸ்ரீஸுமந்து ஆகியோர் வழிபடப்படுகின்றனர்.

பகவத்பாத பஞ்சகம் என்ற மூன்றாவது பிரிவில், ஸ்ரீசங்கர பகவத்பாதர், ஸ்ரீபத்மபாதாசார்யர், ஸ்ரீஸுரேச்வராசார்யர், ஸ்ரீஹஸ்தாமலகர், ஸ்ரீதோடகாசார்யர் ஆகியோர் வழிபடப்படுகின்றனர்.

ஸநக பஞ்சகம் என்ற பிரிவில், ஸ்ரீஸநகர், ஸ்ரீஸநந்தநர், ஸ்ரீஸநாதநர், ஸ்ரீஸநத்குமாரர். ஸ்ரீஸநத்ஸுஜாதர் ஆகியோர் வழிபடப்படுகின்றனர்.

த்ரவிட பஞ்சகம் என்ற பிரிவில், ஸ்ரீத்ரவிடாசார்யர், ஸ்ரீகௌடபாதாசார்யர், ஸ்ரீகோவிந்த பகவத்பாதாசார்யர், ஸ்ரீஸங்க்ஷேபகாசார்யர், ஸ்ரீவிவரணாசார்யர் ஆகியோர் வழிபடப்படுகின்றனர்.

குரு பஞ்சகம் என்ற பிரிவில் ஸ்ரீகுரு, ஸ்ரீபரமகுரு, ஸ்ரீபரமேஷ்டி குரு, ஸ்ரீபராபரகுரு, (அந்ய ப்ரஹ்மவித்யா ஸம்ப்ரதாய கர்த்தார: குரவ:) ப்ரஹ்மவித்யா ஸம்ப்ரதாயத்தை ஏற்படுத்திய ஸந்யாஸியின் மற்ற குருமார்கள் ஆகியோர் வழிபடப்படுகின்றனர்.

ஸ்ரீசுகர், ஸ்ரீநாரதர், ஸ்ரீதுர்கை, ஸ்ரீகணபதி, ஸ்ரீக்ஷேத்ரபாலர்கள், ஸ்ரீஸரஸ்வதீ, இந்த்ரனில் தொடங்கி பத்து திக் தேவதைகள் ஆகியோருக்கும் வழிபாடுகள் செய்யப்படுகின்றன.

நிறைவாக சாளக்ராமத்தில் ஆவாஹநம் செய்யப்பட்டுள்ள சுத்த சைதந்யத்திற்கு பூஜை செய்யப்படுகிறது. ஸமஷ்டி பூஜையுடன் இந்த வழிபாடு நிறைவுபெறுகிறது.



# சாதுர்மாஸ்யம்

## ச்ருங்ககிரி ஜகத்குரு ஸ்ரீபாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள்

ஸ்ரீசங்கர பகவத்பாதர் தர்மத்தை உத்தாரணம் செய்து வர்ணாச்ரமத்தைக் காப்பாற்றிய மஹநீயர். முமுக்ஷுக்கள் ஸந்யாசாஸ்ரமத்தை க்ரமப்படி ஸ்வீகாரம் செய்துகொள்வார்கள்.

ஒரு ஸந்யாஸி செய்ய வேண்டியவற்றைத் தெளிவாகவும், விரிவாகவும் எடுத்துரைத்தவர் ஆதிசங்கரர். யாராலும் செய்ய முடியாத பரோபகாரத்தை ஆதிசங்கரர் நமக்குச் செய்துள்ளார்.

பரிவ்ராஜகாச்ரமத்தை எப்படி நிர்வஹிக்க வேண்டும் என்பதை ஜனங்கள் தெரிந்துகொள்ளக்கூடிய சக்தியில்லாமல் இருந்தபொழுது பகவத்பாதர் நமக்கு அதைக் கடைப்பிடிப்பது பற்றி எடுத்துரைத்தார். ஸந்யாஸாச்ரம ஸ்வீகரணம் செய்தவர்கள் அவசியம் சாதுர்மாஸ்ய வ்ரதத்தை அநுஷ்டிக்க வேண்டும். இந்த வ்ரதத்தின் குறிக்கோள் என்னவென்றால் எந்த ஜீவனுக்கும் பயமோ, ஹிம்ஸையோ கொடுக்கக்கூடாதென்பது.

சாதுர்மாஸ்யம் மழைக்காலமாயிருக்கும். அதே சமயத்தில் அநேக விதமான புழு பூச்சிகள் வெளிவரும். இந்த ஜந்துக்கள் பயமில்லாமலும், ஹிம்ஸைக்கு உட்படாமலும் இருக்க பரிவ்ராஜகம் செய்துகொண்டவர்கள் ஒரே இடத்திலேயே, சாதுர்மாஸ்யத்தில் இருக்க வேண்டும் என்பது சாஸ்த்ரத்தில் குறிப்படப்பட்டுள்ள ஆஜ்ஞை.

இந்த ஸம்ப்ரதாயத்தை ப்ரதியொரு ஸந்யாஸியும் அநுஷ்டிக்க வேண்டும். இந்த சாதுர்மாஸ்யம் தவிர மற்ற காலங்களில் யதிகள் ஓர் இடத்திலேயே தங்காமல், தேசாந்த்ரம் சென்று தர்ம ப்ரசாரம் செய்து மக்களுக்கு ஸந்மார்கத்தை உபதேசம் செய்ய வேண்டும்.

(ஸ்ரீசங்கர க்ருபா, மார்ச் 1988)



# குருபூர்ணிமா

## பூஜ்யஸ்ரீ ஸ்வாமீ தயாநந்த ஸரஸ்வதீ

அன்னையர் தினம், தந்தையர் தினம் போல குருமார்களுக்கும் தினம் இருக்கிறது. குருவிற்குரிய தினமான குரு பூர்ணிமாவன்று, குரு பரம்பரையில் முக்கியமான இடத்தை வகிக்கும் ஸ்ரீவேத வ்யாஸர் வழிபடப்படுகிறார். ஸ்ரீவேத வ்யாஸருக்கும் குருமார்கள் இருந்திருக்கிறார்கள். ஸ்ரீவேத வ்யாஸர் நாம் அறிந்த, அறியாத குருமார்களுக்கிடையே பாலமாக இருக்கிறார்.

இந்த குறிப்பட்ட நாளில் (குரு பூர்ணிமா தினத்தன்று), துறவிகள் இரண்டுமாத காலம் ஓரிடத்தில் தங்கியிருந்து சாஸ்த்ரங்களை கற்பிப்பதற்கு ஸங்கல்பம் எடுத்துக்கொள்கின்றனர். மழைக்காலத்தின் தொடக்கத்தில் குரு பூர்ணிமா வருகிறது. மழைக்காலத்தில் சிறு பூச்சிகள் முதலிய உயிரினங்கள் பூமியில் அதிகம் காணப்படும். பொதுவாக துறவிகள் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் சென்று கொண்டேயிருந்தாலும், இந்த மழைக்காலத்தில் அவர்கள் ஓரிடத்திலேயே தங்கியிருக்கின்றனர். ஸந்யாஸத்தை மேற்கொள்ளும்பொழுது, அவர்கள் எந்த உயிருக்கும் தீங்கு நினையாத அஹிம்ஸா வ்ரதத்தை எடுத்துக்கொள்கின்றனர். மழைக்காலத்தில் பயணம் செய்தால், வழியில் உள்ள சிற்றுயிர்களுக்கு தீங்கு ஏற்படும் என்பதால் அவர்கள் மழைக்காலத்தில் பயணம் செய்வதில்லை. குருபூர்ணிமா தொடங்கி இரண்டு மாதங்களுக்கு அவர்கள் ஓரிடத்திலேயே தங்கியிருந்து கற்பிக்கின்றனர். மரபுப்படி, (நதிகள், வாய்க்கால்கள் முதலிய) இரண்டு நீர்நிலைகளுக்கு இடையே உள்ள இடத்தில் அவர்கள் தங்கியிருக்கின்றனர். அந்த நிலப்பரப்பிற்குள் தேவைப்பட்டால் நடந்து செல்கின்றனர்.

(சாதுர்மாஸ்ய) நான்கு மாதங்கள் மேற்கொள்ளப்பட வேண்டிய வ்ரதம் என்று இது சொல்லப்படுகிறது. இது எப்படி இரண்டு மாதங்களானது? “பக்ஷோ வை மாஸா: இதி சாதுர்மாஸ்யம்।” ஒரு பக்ஷம் என்பது ஒரு மாதமாக கணக்கிடப்படுகிறது. அதன்படி (நான்கு பக்ஷங்கள்) இரண்டு மாதங்கள் துறவிகள் ஓரிடத்தில் தங்கியிருக்கின்றனர்.

குருபூர்ணிமா தினத்தன்று, குரு பரம்பரையைச் சேர்ந்த அனைத்து குருமார்களையும் துறவிகள் வழிபடுகின்றனர். குறிப்பாக ஸம்ப்ரதாயமாக உள்ள மடங்களில், மரபில் உள்ள அனைத்து குருமார்களுக்கும் வழிபாடுகள் செய்யப்படுகின்றன. சங்கர மடம் முதலான பல மடங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு மடத்தின் தலைவரும் பீடாதிபதி எனப்படுகிறார். அவர்களுக்கென்று குறிப்பட்ட அநுஷ்டானங்கள் இருக்கின்றன. பீடாதிபதி ஒவ்வொரு நாளும் குரு பரம்பரையை வழிபடுகிறார். ஒவ்வொரு மரபிலும் குறைந்தது பதினாறு குருமார்களாவது இருக்கிறார்கள். அவர்களது அருட்சக்தியானது சாஸ்த்ர முறைப்படி எலுமிச்சம்பழம், பாக்கு, சாளக்ராமம், விக்ரஹம் முதலியவற்றில் எழுந்தருளச் செய்யப்படுகிறது. இதற்கென்று குறிப்பட்ட சடங்குகள் இருக்கின்றன.

குரு என்ற சொல்லுக்கு பல அர்த்தங்கள் இருக்கின்றன. கற்பிப்பவர் குரு எனப்படுகிறார், துன்பத்திலிருந்து கரையேற்றுபவரும் குரு எனப்படுகிறார். குரு என்ற சொல் ஆங்கில மொழியிலும் கையாளப்படுகிறது. அமெரிக்க பத்திரிக்கை உலகில் குரு என்ற சொல் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது. அவர் ஆட்டோமொபைல் குரு, ஸ்டாக் மார்கெட் குரு என்றெல்லாம் கூறுகின்றனர்! இந்தியாவிலும் அப்படியே குறிப்பிடப்படுகிறது. சிறுவனாக இருந்தபொழுது, நான் சிலம்பம் கற்றேன். அதன்மூலம் ஒருவர் பிறரோடு ஒருங்கிணைந்து செயல்புரியும் கலையைக் கற்க முடியும். எங்கள் குடும்பத்திற்குச் சொந்தமான வயலில் வேலை பார்த்து வந்த ஒருவர் கம்பு சுற்றும் சிலம்பக் கலையில் வல்லுனராக இருந்தார். எனக்குக் கற்றுத் தரும்படி நான் அவரிடம் கேட்டபொழுது, அவர் குரு தக்ஷிணை கேட்டார்! நான் அவருக்கு தேங்காய், பூ, பழம், சிறிதளவு பணம் ஆகியவற்றை குரு தக்ஷிணையாகக் கொடுத்தேன். அதற்குப் பிறகே அவர் கற்றுக்கொடுக்கத் தொடங்கினார். அவர் தான் பயின்ற கலையை மிகவும் மதித்தார், தன்னை அவர் குருவாகவே கருதிக் கொண்டார். நானும் அவருக்கு உரிய மரியாதையை அளித்து வந்தேன்.

ஒருவர் தன்னை குருவாகக் கருதிக்கொண்டால், அவரிடமிருந்து

கற்பவர் அவரை அவ்வாறே உணர்ந்தால், அவருக்குள் சீடனாக இருக்கும் மனநிலை உருவாகிறது. தற்காப்புக் கலைகள் தவிர, கலாசாரத்தை ஒட்டிய நடன ஆசிரியர்களும், ஸங்கீத ஆசிரியர்களும் தங்களை குரு என்றே அழைக்கும்படிக் கூறுகிறார்கள். நேரடியாகக் கலைகளைப் போதிப்பவர்கள் அனைவரும் குருமார்களாகவே கருதப்படுகின்றனர்.

இதற்கு எதிராக நான் சொல்வதற்கு ஒன்றும் இல்லை என்ற போதிலும், குரு என்ற சொல் ஆத்ம ஞானத்தை வழங்குபவரை மட்டுமே குறிக்கும் என்றும் கூற விரும்புகிறேன். நான் முழுமையானவன், அனைத்துமாக இருப்பவன், இறைவனுக்கு அந்நியமானவன் அல்ல என்ற பேருண்மையை விளங்க வைப்பவரே குரு.

**குரு உபதேஶ கர்த்தா।** நானும் இறைவனும் ஒன்று என்று பொருள்படும் மஹாவாக்யத்தை உபதேசிப்பவரே குரு ஆவார். நாம் தேடும் நிறைவு நமக்கு வேறாக இல்லை. நாம் அதைத் தேடுகிறோம் என்பதற்குக் காரணமே, நாம் நாமாக இருக்க விரும்புவதுதான். இதனை நமக்குக் கற்றுக்கொடுப்பவர் குரு. குரு என்ற சொல்லுக்கு இதுவே நிறைவான விளக்கம் :

**மஹாவாக்ய உபதேஶ கர்த்தா -** நானும் இறைவனும் ஒன்று என்பதை விளக்கும் மஹாவாக்யத்தை உபதேசிப்பவர்.

குரு என்பவர் ஒரு மனிதர்.

**குருர் ப்ரஹ்மா குருர் விஷ்ணு: குருர் தேவோ மஹேஶ்வர:।**

என்று அவரைப் போற்றித் துதிக்கும்போது, அவரது மனிதத்தன்மை கருத்தில் கொள்ளப்படுவதில்லை. உண்மையான விஷயம் மட்டுமே கூறப்படுகிறது. “நீ வரையறைக்கு உட்படாதவன், நீ பரம்பொருள்” என்று அவர் உபதேசிக்கிறார். “நான் வரையறைக்குட்பட்டவன், நீ வரையறைகளைக் கடந்தவன்” என்ற பொருளில் அவர் உபதேசிக்கவில்லை.

வரையறைகளைக் கடந்தவர் ப்ரஹ்மா, விஷ்ணு, மஹேஶ்வரர். நீயும் வரையறையைக் கடந்தவன், எல்லையற்றவன். அனைத்துமே எல்லையற்றது. குருவைப் போற்றும்போது, இந்த முழுமையில் மனித அம்சம் அடங்கிவிடுகிறது. மனித

அம்சத்தைப் பின்னுக்குத் தள்ளுகிறோம், அல்லது மனித அம்சத்தை முழுமையான பரம்பொருளில் அடக்கிவிடுகிறோம். முழுமுதற்பொருளைத்தான் வணங்குகிறோம்.

உபதேசம் செய்யும் குருவானவர், வழிபாட்டுக்குரிய பீடமாக ஆகிறார். வழிபடுவது முழுமுதற்பொருளைத்தான். தக்ஷிணாமூர்த்தியின் வடிவத்தைக் கோயிலில் வழிபடுகிறோம், உண்மையில் நாம் அந்த மூர்த்தியை வழிபடுவதில்லை, இறைவனைத்தான் வழிபடுகிறோம். இறைவனை ஒரு குறிப்பிட்ட வடிவத்தில் எழுந்தருளச் செய்து வழிபடுகிறோம். அதேபோன்று, நீங்கள் ஶ்ரத்தை வைத்திருக்கும், உங்களுக்கு கற்பித்த ஒருவரை போற்றிப் புகழும்போது, அதன் மூலம் தனிப்பட்ட மனிதர் புகழப்படுவதில்லை, உங்களுக்கு உபதேசிக்கப்பட்ட மெய்ப்பொருளே போற்றப்படுகிறது. அந்த மெய்ப்பொருள், அதனைக் கற்பிப்பவருக்கு வேறாக இல்லை.

**குருர்ப்ரஹ்மா குருர்விஷ்ணு: குருர்தேவோ மஹேஶ்வர:।**
**குரு: ஸாக்ஷாத் பரம்ப்ரஹ்ம தஸ்மை ஸ்ரீகுரவே நம:॥**

குருவே ப்ரஹ்மன், குருவே விஷ்ணு, குருவே சிவன், குருவே எல்லையற்ற பரம்பொருள். அப்படிப்பட்ட குருவுக்கு நமஸ்காரம்.

குருவைப் போற்றுவதன் மூலம் பரம்பொருள் தத்துவம் போற்றப்படுகிறது.

**அகண்டமண்டலாகாரம் வ்யாப்தம் யேந சராசரம்।**
**தத்பதம் தர்ஶிதம் யேந தஸ்மை ஸ்ரீகுரவே நம:॥**

அண்டத்தில் உள்ள உயிருள்ள உயிரற்ற அனைத்தும் எதனால் வ்யாபிக்கப்பட்டுள்ளதோ, அந்தப் பரம்பொருளைக் காட்டித் தந்த குருநாதருக்கு நமஸ்காரம்.

ஞானத்தை அடைவதுதான் மிகப் பெரிய அற்புதம். புதிதான ஒரு விஷயத்தை நம்முடைய புத்தி எப்படி க்ரஹித்துக்கொள்கிறது? இயல்பிலேயே நாம் அறியாமை உடையவர்களாக இருந்தால், நம்மால் அறிந்துகொள்ள முடியாது. இயல்பிலேயே அறிந்துகொள்ளக் கூடியவர்களாக இருந்தால், நமக்கு உபதேசம் தேவையில்லை. அறிவு வளர வளர அறியாமை அகல்கிறது. ஒரு குறிப்பிட்ட சூழ்நிலைகளில்தான் நம்மால் அறிவைப் பெற

முடியும். குரு அந்த சூழ்நிலைகளை உருவாக்குகிறார். உள்ளத்தில் யுக்திபூர்வமாகவும், நம்முடைய அனுபவங்களை எடுத்துக்காட்டியும் ஞாநம் ஏற்படுவதற்கு வேண்டிய அகச்சூழ்நிலைகளை குருநாதர் ஏற்படுத்துகிறார். அவர் நமக்கு புரிந்துகொள்வதற்கு உதவி செய்கிறார். புரிந்துகொள்வதற்கு வேண்டிய சூழ்நிலையை ஏற்படுத்துகிறார்.

இந்த அகச்சூழ்நிலை இல்லாமல் உங்களால் உண்மையைப் புரிந்துகொள்ள முடியாது. இதுதான் உபதேசத்தின் சிறப்பு. அதனால்தான் அதனை அற்புதம் என்று குறிப்பிட்டேன். நீங்கள் அறிந்தவற்றுக்குமேல் உங்களால் புரிந்துகொள்ள முடியாது. ஆனால் மேலும் மேலும் அறிந்துகொண்டே செல்கிறீர்கள். இது எப்படி நிகழ்கிறது என்று கேட்டால், நீங்கள் எல்லாம் அறிந்தவர் என்பதே பதில்.

உங்களுடைய உண்மையான இயல்பு தூய அறிவே ஆகும். கடவுள் அனைத்தும் அறிந்தவர், அனைத்து அறிவும் கடவுளுக்குள் அடங்கிவிடுகிறது என்று சொல்கிறோம்.

கடவுள், நான் கடவுள் என்று கூறுகிறார். அவர் கூறும் நான் என்பதற்குரிய பொருளும், நீங்கள் கூறும் நான் என்பதற்குரிய பொருளும் வேறல்ல. நான் என்பது வரையறைகள் அற்ற உணர்வைக் குறிக்கிறது.

உணர்வு ஒன்று, உருவமற்றது – அதனால் எந்த வரையறைக்கும் உட்படாதது. இறைவன் சைதந்ய ஸ்வரூபம், உணர்வு வடிவானவர். எல்லையற்ற உணர்வு என்பது உங்களுக்கும் இறைவனுக்கும் ஒன்றாகவே இருக்கிறது.

உடல், மனம், இந்த்ரியங்களைப் பொருத்தவரை நான் வரையறைக்கு உட்பட்டவனாக இருக்கிறேன். ஆனால் உணர்வாக நான் வரையறைகளுக்கு உட்படாதவன். இறைவன் எல்லாம் அறிந்தவர், அனைத்து அறிவும் உணர்வில் இருக்கின்றன.

எந்த உணர்வு? ஒன்றாக இருக்கின்ற, வரையறைகளுக்கு உட்படாத நீங்கள்தான் அது. எல்லா அறிவும் உங்களுக்குள் இருக்கின்றன.

எல்லா அறிவும் எனக்குள் இருக்கிறது என்றால், எனக்கு ஏன் அது

தெரியவில்லை என்பது அடுத்த கேள்வி. தனிமனிதனைப் பொருத்தவரை இந்த அறிவு மறைக்கப்பட்டிருக்கிறது. இறைவனுக்கு மறைக்கப்படவில்லை. அறியாமையாகிய ஆவரணம் அல்லது மறைப்பு அறிவை மூடியிருக்கிறது. ஞானம் ஏற்படுவதற்கு வேண்டிய அகச்சூழ்நிலைகளை ஏற்படுத்தியவுடன் மறைப்பு விலகிவிடுகிறது.

மறைக்கும் சக்தியாகிய அறியாமை நீங்கிவிடுகிறது. அறிவு ஏற்கெனவே இருக்கிறது. மறைப்பை நீக்குவதுதான் நம் வேலை.

ஒன்றையும் நாம் நாமாக அறிவதில்லை. அனைத்துவித அறிவும் இறைவனிடமிருந்தே பெறப்படுகின்றன. ஒவ்வொரு தனிப்பட்ட அறிவும் ஒட்டுமொத்த அறிவில் அடங்கிவிடுகிறது. மறைப்பை நீக்குவதைத்தான் நாம் அறிவது என்று கூறுகிறோம்.

கண் அறுவை சிகிச்சை நிபுணர், புரையை நீக்கி, நாம் உலகைப் பார்க்குமாறு செய்கிறார். அதேபோன்று குருநாதர், அறியாமையாகிய திரை நீங்குவதற்குரிய அகச்சூழ்நிலைகளை ஏற்படுத்தி, நம்முடைய, உலகினுடைய உண்மையான இயல்பை அறிவதற்கு உதவிபுரிகிறார்.

இரண்டுவிதமான பார்வையிழப்பு இருக்கின்றன. ஒன்று சரிசெய்ய முடியாதது, மற்றொன்று சரிசெய்யக் கூடியது. இரண்டாவது விதமான பார்வையிழப்பைப் பற்றி இந்த ச்லோகம் கூறுகிறது.

**அஜ்ஞாந திமிராந்தஸ்ய ஞாநாஞ்ஜந ஶலாகயா।**
**சக்ஷுருந்மீலிதம் யேந தஸ்மை ஶ்ரீகுரவே நம:॥**

எவர் அறியாமையாகிய புரையால் பார்வையிழந்த எனக்கு ஞானமாகிய களிம்பைத் தடவி கண்களைத் திறந்தாரோ, அந்த குருநாதருக்கு நமஸ்காரம்.

திமிரம் என்றால் புரைநோய் என்று பொருள். மருத்துவர் அறுவை சிகிச்சை செய்து கண்ணில் உள்ள புரையை நீக்குகிறார். இந்தியாவில், இந்த ச்லோகம் இயற்றப்பட்ட காலத்தில், புரைநோய்க்கு களிம்பு வடிவில் மருந்து இருந்திருக்கிறது. அறிவு அறியாமையாகிய புரையால் மறைக்கப்பட்டிருக்கிறது. புரையை நீக்க முடிவதுபோல், இதனையும் நீக்க முடியும். ஒவ்வொருவரும் அறியாமையாகிய புரையினால் குருடானவர்களே. இந்த

அறியாமை புரை என்று அழைக்கப்படுகிறது, ஏனென்றால் இதனால் அறிவு மறைக்கப்படுகிறது. இந்த மறைப்பு குருவால் நீக்கப்படுகிறது.

உண்மையில் குருநாதர் புதிதாக எதையும் கற்பிப்பதில்லை. அவர் அறியாமையாகிய மறைப்பை நீக்குகிறார். இது மிகவும் பொறுப்பு வாய்ந்த வேலை. உண்மையை அறிந்தவரும், கற்பிக்கும் முறை தெரிந்தவருமான ஒருவர் மட்டுமே இதனைச் செய்ய முடியும். ஆசிரியர் உண்மையை அறிந்திராவிட்டால், மற்றவர்களை அவர் குழப்பிவிடக் கூடும்.

ப்ரச்சினை அஸாதாரணமானதாக இருப்பதால், ஒரு கற்பிக்கும் முறை தேவைப்படுகிறது. ஒரு புத்தகத்தில் குரு என்பவர் சிறிது கூடுதல் கருணை நிரம்பியவராக இருக்க வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது.

கருணை நிறைந்த ஒரு ஸாதாரண மனிதன், வேறு ஒருவர் துன்பப்படுவதைக் கண்டால், அதனைத் தன் துன்பமாகவே கருதி, அவருக்கு இரங்கித் தன்னால் இயன்ற வகையில் அவருக்கு உதவ முற்படுவார். இது இயல்பான மனிதநேயம்.

ஆனால், காரணமே இல்லாமல் ஒருவர் துன்பப்பட்டுக் கொண்டிருந்தால், அவரைப் பார்த்து கருணை ஏற்படாது. அதனால் சிறிது கூடுதல் கருணை மிகுந்த குருநாதர் தேவைப்படுகிறார் என்று கூறுகிறார்கள்.

ஒரு குறிப்பிட்ட காரணத்தால் ஒருவர் துன்பப்பட்டால் அந்த துன்பத்தை நீக்குவதற்கு, அந்தக் காரணத்தை நீக்கி உதவலாம். ஆனால் காரணமே இன்றித் துன்பப்படுபவரின் துன்பத்தை எப்படி நீக்குவது? ஒருவன் தன்னைப் பாம்பு கடித்துவிட்டது என்று தவறாக எண்ணிக் கொண்டான். உண்மையாகவே பாம்பு கடித்திருந்தால் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று, சிகிச்சை செய்யலாம்.

ஆனால் காலில் முள் குத்தி, அதே நேரத்தில் பாம்பு போன்ற ஒரு நீர்க் குழாயையும் தரையில் கண்டு ஒருவன் கத்துகிறான் என்று வைத்துக்கொள்வோம். காலில் உள்ள முள்ளை நீக்கிவிடலாம், ஆனால் பாம்பு கடித்துவிட்டது என்று நம்பும் அவனுக்கு என்ன சிகிச்சை அளிப்பது? எப்படி அவருக்கு உதவுவது? ஒன்றும்

ஆபத்து இல்லை என்று அந்த இடத்தை விட்டு அகன்றுவிடலாம், ஆனால் அவர் துன்பப்பட்டுக் கொண்டிருப்பதை நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். அதனால்தான் சிறிது கூடுதல் கருணை தேவைப்படுகிறது. "நானும் ஒரு காலத்தில் அப்படித்தான் இருந்தேன், இதுபோன்ற அனுபவம் எனக்கும் ஏற்பட்டது" என்று உணர்ந்திருப்பதன் காரணமாகப் பிறந்த கருணை அது.

அதனால்தான் குருநாதர் **அஹேதுக தயாஸிந்து** - ஒரு காரணமுமின்றி அருள்புரியும் கருணைக்கடல் என்று கூறுகிறோம்.

குருநாதர் நம் மீது கொண்டுள்ள கருணைக்கு காரணமே இல்லை. என்மீது ஏன் இவ்வளவு கருணை அவருக்கு? ஏன் எனக்கு உபதேசிக்கிறார்? நான் என்ன செய்துவிட்டேன்? என்று சிஷ்யன் கேட்கலாம். அவர் சிஷ்யனிடமிருந்து எதையும் எதிர்பார்ப்பதில்லை.

"ஏன் உபதேசிக்கிறீர்கள்? என்று கேட்கிறாய். ஏன் உபதேசிக்கக் கூடாது? உனக்கு இந்த உபதேசம் தேவைப்படுகிறது, அதனால் உபதேசிக்கிறேன்" என்கிறார் அவர்!

இந்த அறிவு, கல்வித்திட்டத்தில் ஏதோ ஒரு பாடத்தை, குறிப்பிட்ட புத்தகத்தைக் கொண்டு படிப்பது போன்றது அல்ல. இது ஒரு முழுமையான அறிவு.

இந்த அறிவு வேலை செய்வதற்கு, ஆசிரியர் - மாணவரிடையேயான இணக்கம் மிக முக்கியம்.

நம் நம்பிக்கைக்கு உகந்த மருத்துவரிடம் நாம் கொள்ளும் இணக்கம் போன்றது இது. இதற்குக் குறிப்பட்ட அளவு காலமும் தேவைப்படுகிறது.

குரு என்பவர் ஒரு அற்புதமான மருத்துவர். அவர் ஒரு காலகட்டத்தில், நேரடியாகவும், மறைமுகமாகவும் உங்கள் சிந்தனையை மாற்றியமைக்கிறார்.

மிகவும் குறிப்பிடத்தக்க விஷயம் என்னவென்றால், குருவானவர் உங்கள் உள்ளக்கதவுகளைத் திறந்து, உங்களைப் பற்றியே உங்களுக்குக் கற்றுக்கொடுக்கிறார்.

உங்களால் முழுமையாக ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில்

உங்களுக்கு உங்களைப் பற்றிச் சொல்லிக் கொடுக்கிறார். குருவைத் தவிர வேறு எந்த இணக்கத்திலும் இது ஸாத்தியமில்லை.

ஒருவரிடம் நான் உன்னை காதலிக்கிறேன் என்று எவரேனும் சொன்னால், அவர் முழுமையாக, எந்த நிபந்தனைகளுமின்றி தாம் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக உணர்கிறார். உயரம், மூக்கு, மனம் - ஆகிய அனைத்தும் ஏற்றுக்கொள்ளப்பட்டுவிட்டது.

இந்த அனுபவத்தால், குறைந்தபக்ஷம் வேறு ஒருவருக்காவது ஏற்றுக்கொள்ளப்பட்டவராக இருக்கிறார். மற்றவர், நான் உன்னை விரும்புகிறேன் என்று சொன்னதால், தன்னிடம் அனைத்தும் சரியாக இருப்பதாக அவர் உணர்கிறார். இந்த ஏற்றுக்கொள்ளுதல் அவரது கண்களிலிருந்து வரவில்லை, வேறு ஒருவரின் கண்களின் மூலமாக வருகிறது.

சிறிது காலத்திற்குப் பறகு, இருவருமே ஒருவரைப் பற்றி ஒருவர் ஏற்றுக்கொள்ள முடியாத பல அம்சங்கள் இருப்பதை உணர்கின்றனர்.

முழுமையான அன்பிற்கு உரியவராக, ஏற்றுக்கொள்ளக் கூடியவராக, நம்மைப் பற்றி நாம் அறிந்துகொள்வது மிகவும் அவசியம். அதைத்தான் குருநாதர் செய்கிறார். நாம் அன்பிற்குரியவர் என்பதை அறிந்துகொள்ள உதவுகிறார். அவர் நம்மை விடுவிக்கிறார்.

உங்களைப் பற்றிய ஞானத்தை அடைந்துவிட்டதால், எல்லோர் மீதும் அன்பு செலுத்துகிறீர்கள். 'அன்பின்' ஊற்றாக உங்களை உணர்ந்துகொள்கிறீர்கள்.

அதனால்தான் குரு-சிஷ்ய உறவுமுறை மற்ற உறவுமுறைகளைக் காட்டிலும் வேறானது என்று சொல்கிறோம். சாஸ்த்ரத்திலும், ஸம்ப்ரதாயத்திலும் அதனால்தான் குருநாதர் போற்றப்படுகிறார்.

ஆன்மிக நாட்டமுடையவர்களுக்கு குருபூர்ணிமா ஒரு முக்கியமான நாளாகும்.

இந்த நாளில் நாம் குரு பரம்பரையில் உள்ள அனைத்து குருமார்களின் அருளையும் வேண்டுகிறோம்.

ஆதிகுருவான, அனைத்து அறிவிற்கும் காரணமான ஸ்ரீதக்ஷிணாமூர்த்தியை குருவருள் வேண்டி போற்றி வணங்குகிறோம்.



# குருபூர்ணிமாவின் முக்கியத்துவம்

**பூஜ்யஸ்ரீ ஸ்வாமீ பரமார்த்தாநந்தர்**

(1994 ம் ஆண்டு, குரு பூர்ணிமா தினத்தன்று ஆற்றிய உரை)

**ஸதாஶிவ ஸமாரம்பாம் ஶங்கராசார்ய மத்யமாம்।**
**அஸ்மதாசார்ய பர்யந்தாம் வந்தே குருபரம்பராம்॥**

குருபூர்ணிமா குறிப்பாகத் துறவிகளுக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த நாளாகும். துறவிகளுக்கும், துறவிகளோடு தொடர்புடையவர்களுக்கும் இது சிறப்பு வாய்ந்த ஒரு நாளாகும்.

குருபூர்ணிமா மட்டுமல்ல, நம் ஸம்ப்ரதாயத்தில் கொண்டாடப்படும் எந்த விழாவின் முக்கியத்துவத்தையும் வேதம் காட்டும் வாழ்க்கைநெறியை அறிந்தால்தான் புரிந்துகொள்ள முடியும்.

ஒரு காலத்தில் மக்கள் வேதம் காட்டும் வாழ்க்கைநெறிப்படி வாழ்ந்தார்கள். அதனால்தான் நம்முடைய வாழ்க்கைமுறை வைதிக தர்மம் அல்லது ஸநாதந தர்மம் என்று அழைக்கப்படுகிறது.

வேதம் காட்டும் வாழ்க்கைநெறிக்கு வர்ணாஶ்ரம தர்மம் என்று பெயர். வர்ண தர்மம் என்பது நான்காக பிரிக்கப்பட்டுள்ள ஸமூக அமைப்பைக் குறிக்கிறது.

மற்றொன்று ஆஶ்ரம தர்மம். இது (ப்ரஹ்மசர்ய, க்ருஹஸ்த, வாநப்ரஸ்த, ஸந்யாஸ ஆஶ்ரமங்கள்) தனிமனிதனின் வாழ்க்கையில் உள்ள நான்கு நிலைகளை அடிப்படையாகக் கொண்டது.

ஸமூக அமைதிக்காக ஏற்படுத்தப்பட்டது வர்ண தர்மம். இதில் தனிமனிதனை விட ஸமூகத்திற்கே முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. இது தனிமனிதனின் ஸமூகக் கடமைகளை எடுத்துக் கூறுகிறது.

ஆஶ்ரம தர்மத்தில், வாழ்வின் பல்வேறு நிலைகளில், தனிமனித வளர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது.

வர்ண தர்மமும், ஆஶ்ரம தர்மமும் கடைப்பிடிக்கப்பட்டால், ஸமூக வளர்ச்சி, தனிமனித வளர்ச்சி இரண்டுமே சீராக இருக்கும்.

இதுவே வேதங்களால் வகுத்துக்கொடுக்கப்பட்ட வாழ்க்கைமுறை.

வேதத்தைச் சார்ந்து ஸ்ம்ருதி, இதிஹாஸ, புராணங்கள் முதலிய நூல்கள் எழுந்தன. அவையும் தனிமனித ஒழுக்கத்தையும், ஸமூக ஒழுக்கத்தையும் போதித்தன.

ஆனால் துரதிர்ஷ்டவசமாக, இன்றைய சூழ்நிலையில் வர்ணாச்ரம தர்மம் என்ற திட்டம் கிட்டதட்ட மறைந்துவிட்டது.

அதனால் நம் பண்பாட்டில் கடைப்பிடிக்கப்படும் பூஜைகள், சடங்குகள் முதலியவற்றின் முக்கியத்துவம் நமக்குப் புரிவதில்லை.

அவை இந்தக் காலத்திற்குப் பொருந்தாதவையாக நமக்குத் தோன்றுகிறது, சில சமயம் கேலிக்கூத்தாகவும் கூடத் தெரிகிறது.

உபநயனத்தின்போது, உபநயநம் செய்விக்கப்படும் சிறுவனின் மாமா அவனைத் தூக்கிக்கொண்டு செல்ல வேண்டும் என்று ஒரு சடங்கு இருக்கிறது.

அந்தக்காலத்தில் ஏழு வயதில் உபநயநம் நடைபெற்றதால், இது மிகவும் ரஸிக்கும்படியாக இருந்தது. இன்றைய காலகட்டத்தில், திருமணத்திற்கு முன்பாக உபநயநம் செய்யப்படுகிறது!

எழுபத்தைந்து கிலோ எடையுள்ள இருபத்தைந்து அல்லது முப்பது வயது இளைஞனை மாமா தூக்கிக்கொண்டு செல்லும் காட்சியைக் கற்பனை செய்து பாருங்கள்!

அதேபோன்று **கந்யகா** தானத்தின்போது, மகள் தந்தையின் மடியில் அமர வேண்டும்.

இன்றைய காலகட்டத்தில் மணப்பெண்ணின் வயதையும், எடையையும் எண்ணிப் பாருங்கள், அந்தத் தந்தையின் நிலை என்னாவது?

நம் பண்பாட்டில் பல சடங்குகள் இதுபோன்று தங்கள் முக்கியத்துவத்தை இழந்து, காலத்திற்கு பொருந்தாததுபோல் நமக்குத் தோன்றுகின்றன.

மெல்ல, இவை இயந்திரத்தனமாகவும் ஆகிவிடுகின்றன. ஓரிரு தலைமுறைகளுக்குப் பின்னர், அவை நம் வாழ்க்கையை விட்டே மறைந்துவிடுகின்றன.

அவை மறைந்து, வேறு வாழ்க்கைமுறையை நாம் தேர்ந்தெடுத்த பின்னர், நாம் அதை சரி என்றோ, தவறு என்றோ கூற முடியாது.

ஒரு செயலை சரி என்றோ தவறு என்றோ கூறுவதற்கு என்ன விதி? வர்ணாஸ்ரம திட்டம் அந்தக் காலத்தில் விதியாக இருந்தது.

வர்ணாஸ்ரம தர்மத்தை மனதில்கொண்டு சில செயல்களை சரி என்றும், சில செயல்களைத் தவறு என்றும் கூறி வந்தனர்.

வர்ணாஸ்ரம தர்மம் நம் வாழ்க்கையைவிட்டு மெல்ல மறைந்துவரும் இந்த நாளில், நாம் முடிவுசெய்ய எந்த விதிமுறையும் இல்லை.

ஒருவர் பாடும்பொழுது, அவர் ச்ருதியோடு பாடுகிறாரா அல்லது அபச்ருதியோடு பாடுகிறாரா என்பதை எப்படித் தெரிந்துகொள்ள முடியும்? தம்புரா, ச்ருதிப்பெட்டி முதலியவற்றின் துணையோடுதான் அறிய முடியும்.

தம்புரா என்பது விதிமுறை ஆகிறது. அதனை ஆதாரமாகக்கொண்டு, ச்ருதியா அபச்ருதியா என்று சொல்ல முடிகிறது.

இன்றைய காலகட்டத்தில் கலப்புத் திருமணங்கள் நிறைய நிகழ்கின்றன. இது பல பெற்றோர்களைப் பாதிக்கிறது.

பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு தர்மங்களைக் கற்றுக்கொடுக்க முற்படுகிறார்கள்.

இது முறையற்ற செயல் என்று குழந்தைகளுக்குப் புரிய வைக்க வேண்டுமானால், முறையானவற்றைப் பற்றிப் பேச வேண்டும்.

முறையையும், முறையற்ற தன்மையையும் பற்றிப் பேச, வர்ணாஸ்ரம தர்மமே ஆதாரமாக இருக்கிறது.

வர்ணாஸ்ரம தர்மம் செயல்படாத இந்தக்காலத்தில் பெற்றோர்களால் குழந்தைகளுக்கு இதனைப் புரிய வைக்க முடியவில்லை.

ஏனென்றால், அவர்களுக்கு விதிமுறைகள் தெரியவில்லை. அவர்களிடம் முதலில் வர்ணாஸ்ரம தர்மம் என்ற ஆதாரத்தைப் பற்றிப் பேச வேண்டியிருக்கிறது.

ஸங்கீத ஆசிரியர் ஒருவர் தம்புராவை மீட்டி, சீடனின்

அபச்ருதியை சுட்டிக்காட்டுவதற்கு முயல்கிறார். அதற்கு முன்னால் ஒரு பயங்கரமான உண்மை புலப்படுகிறது. ஆசிரியரே அபச்ருதியுடன் பாடிக்கொண்டிருக்கிறார்!

வர்ணாஶ்ரம தர்மத்தைப் பற்றிப் பேசத் தொடங்கியுவுடன், பெற்றோர்களுக்கே ஒரு உண்மை புரிகிறது. அல்லது புத்திசாலிக் குழந்தைகள் கேட்கிறார்கள், “உங்கள் வாழ்க்கையும், செயல்பாடுகளும் வர்ணாச்ரம தர்மப்படி இருக்கிறதா?”

பலரது தொழில் வர்ண தர்மத்தின் அடிப்படையில் இல்லை. அவர்களுடைய தினசரி வாழ்க்கை, க்ருஹஸ்த தர்மப்படி இல்லை.

அவர்கள் அதனைக் கடைப்பிடிக்க முடியாதபோது, அவர்களால் முறையைப் பற்றியும், முறையற்ற தன்மையைப் பற்றியும் குழந்தைகளிடம் பேச முடிவதில்லை.

ஜாதி, மதம், ஸமூக அமைப்பு முதலியவற்றை பராமரிப்பதன் முக்கியத்துவத்தை நாம் வர்ணாஶ்ரம தர்மத்தின் மூலம்தான் புரிந்துகொள்ள முடியும்.

குருபூர்ணிமா உட்பட எல்லாவற்றிற்கும் பொருந்தும். இது பற்றிய விவரங்களை ஆழமாகப் பார்த்தால், இதுவும் ஒரு சடங்காகிவிட்டதை உணர முடியும்.

ப்ரஹ்மசர்ய, க்ருஹஸ்த, வாநப்ரஸ்த, ஸந்யாஸம் ஆகிய நான்கு ஆச்ரமங்களில் மிகவும் முக்கியமான ஆச்ரமங்கள் இரண்டு. ஒன்று க்ருஹஸ்த ஆச்ரமம் (இல்லறம்), மற்றொன்று ஸந்யாஸ ஆச்ரமம் (துறவறம்).

ப்ரஹ்மசர்ய ஆச்ரமத்தில் க்ருஹஸ்தாச்ரமத்திற்கான தயாரிப்பே நிகழ்கிறது. ப்ரஹ்மசர்ய ஆச்ரமத்தை க்ருஹஸ்தாச்ரமத்திற்குள் சேர்த்துக்கொண்டுவிடலாம்.

வாநப்ரஸ்த ஆச்ரமம் என்பது ஸந்யாஸ ஆச்ரமத்திற்கான தயாரிப்பே ஆகும். எனவே, வாநப்ரஸ்த ஆச்ரமத்தை ஸந்யாஸ ஆச்ரமத்திற்குள் இணைத்துக்கொண்டுவிடலாம்.

ஆக, க்ருஹஸ்த ஆச்ரமம், ஸந்யாஸ ஆச்ரமம் என்று இரண்டு ஆச்ரமங்களே இருக்கின்றன. ஒன்று ப்ரவ்ருத்தி தர்மம், மற்றொன்று நிவ்ருத்தி தர்மம். க்ருஹஸ்தாச்ரமத்தை மேற்கொண்டவர்கள், வேதபூர்வத்தில் கூறப்பட்டுள்ளவற்றைக்

கடைப்பிடிக்கிறார்கள். வேதத்தின் முற்பகுதியான கர்மகாண்டம், தர்ம சாஸ்த்ரம் க்ருஹஸ்தர்களுக்கு விதியாகிறது. ஸந்யாஸிகளுக்கு வேதத்தின் பிற்பகுதியாகிய ஞானகாண்டம் விதியாகிறது.

க்ருஹஸ்தர்கள், ஸந்யாஸிகள் இருவருக்குமே வாழ்க்கைமுறைகளும், கடமைகளும் சாஸ்த்ரங்களால் விதிக்கப்பட்டிருக்கின்றன.

ஸந்யாஸிகள் அனைத்தையும் விட்டுவிட வேண்டும் என்பதில்லை, அவர்களுக்கென்று ஆசார அநுஷ்டானங்கள், கடமைகள் ஆகியவை இருக்கின்றன.

ஆசார அநுஷ்டானங்களை ஒரு குறிப்பட்ட முறையிலிருந்து வேறொரு முறைக்கு மாற்றுவதுதான் துறவு. இதனைக் குறிப்பதற்கென்று ஸந்யாஸிக்கு தண்டம் வைத்தார்கள்.

பூணூல் எனப்படும் யஜ்ஞோபவீதம், சிகை முதலியவை இல்லறத்தில் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகளை குறிக்கும் சின்னங்கள் ஆகும். துறவி யஜ்ஞோபவீதம், சிகை முதலியவற்றை நீக்கிவிடுகிறார். அவரது கடமைகளைக் குறிப்பதற்கென்று தண்டம் வைக்கப்பட்டது.

மூன்று தண்டங்களுடன் கூடிய துறவியை, த்ரிதண்ட ஸந்யாஸி என்று கூறுவார்கள்.

த்ரிதண்ட ஸந்யாஸத்தில் மூன்று ஒழுக்கங்களைப் பின்பற்ற வேண்டும்.

அவை காய தண்டம், வாக் தண்டம், மநோ தண்டம் ஆகியன.

உண்பது, உறங்குவது, பேசுவது, விழிப்பது, நடப்பது, உட்காருவது முதலிய அனைத்திலும் ஒழுக்கத்தைக் கடைப்படிப்பது காய தண்டம்.

அதே போன்று பேச்சில் ஒழுக்கத்தைக் கடைப்பிடித்தல் வாக் தண்டம் என்றும், உள்ளத்தை செம்மைப்படுத்துதல் மநோ தண்டம் என்றும் கூறப்படுகிறது.

**தண்ட:** என்றால் ஒழுக்கம் என்று பொருள். மநோ தண்டத்தை அடைந்தபிறகு, அவர் ஏக தண்டத்திற்கு வர வேண்டும். ஏக தண்டத்திற்கு ஞாந தண்டம் என்று பெயர். இது ஞான யோக

ஸாதனைகளான ஶ்ரவண, மநந, நிதித்யாஸநத்தைக் (வேதாந்த சாஸ்த்ரங்களை முறையாக குருவிடம் கேட்டல், சிந்தித்தல், தெளிதல்) குறிக்கும்.

அதனோடுகூட உபநிஷத் பாராயணம், சங்கர பாஷ்ய பாராயணம் ஓங்கார ஜபம், தர்ப்பணம் முதலிய சில சடங்குகளும், ஒழுக்கங்களும் விதிக்கப்பட்டன.

ஒரு காலத்தில், துறவிக்கு ஏன் இவ்வளவு சடங்குகள் விதிக்கப்பட்டிருக்கின்றன என நான் எண்ணியதுண்டு.

அனைத்தையும் விட வேண்டும் என்பதற்காகத்தானே அவர் துறவறம் மேற்கொள்கிறார்? இரண்டு காரணங்களுக்காக அவை தேவைப்படுகின்றன என நான் புரிந்துகொண்டேன்.

(முற்காலங்களில்) ஒருவர் ஸந்த்யா வந்தநம், ஜபம், பூஜை முதலிய ஆசார அநுஷ்டானங்களை க்ருஹஸ்தாச்ரமத்தில் கடைப்பிடித்திருப்பார்.

ஸந்யாஸம் எடுத்துக்கொண்டவுடன் எல்லாவற்றையும் விட்டுவிடும்பொழுது ஒரு மிகப் பெரிய வெறுமை தோன்றும். வேலையிலிருந்து ஓய்வு பெறுபவரை வீட்டில் சமாளிப்பது எளிதன்று! அதுபோன்றதுதான் இது.

திடீரென்று ஏற்படும் வெறுமையைக் கையாளுவது கடினம் என்பதால் துறவறத்திலும் சில ஒழுக்கங்களை வைத்தார்கள்.

காயத்ரீ மந்த்ரத்திற்கு பதிலாக ஓங்காரத்தை வைத்தார்கள். ஸ்தோத்ர பாராயணத்திற்கு பதிலாக உபநிஷத் பாராயணம் விதிக்கப்பட்டது.

வீட்டில் செய்துவந்த வேலைகளுக்கு பதிலாக குரு ஸேவை, ஆச்ரம ஸேவை முதலியவை விதிக்கப்பட்டன.

வேதாந்த ச்ரவண மநந நிதித்யாஸநத்தை அநுசரித்து அநுஷ்டானங்கள் விதிக்கப்பட்டன.

ஆக, வெறுமையை நீக்குவதற்காக ஒழுக்கங்கள் விதிக்கப்பட்டன என்பது முதல் காரணம்.

இரண்டாவது காரணம், துறவறம் ஏற்றுவிட்டதாலேயே ஒருவருக்கு ஸாதந சதுஷ்டய ஸம்பத்தி இருக்கிறது என்று சொல்லிவிட முடியாது.

ஞானத்தை அடைவதற்குரிய தகுதிகள் சிலருக்கு இருக்கலாம், வேறு சிலருக்கு இல்லாமல் இருக்கலாம்.

ஒருவருக்கு சித்தசுத்தி இல்லை, ஆனால் புறத்தில் துறவற ஆடை அணிந்திருக்கிறார் என்றால், அது ஆபத்தானதாக முடியக்கூடும்.

ஸ்ரீக்ருஷ்ணர் ஸ்ரீமத்பகவத்கீதையில் கூறுகிறார்,

**கர்மேந்த்ரியாணி ஸம்யம்ய ய: ஆஸ்தே மநஸா ஸ்மரந்।**
**இந்த்ரியார்த்தாந் விமூடாத்மா மித்யாசார: ஸ உச்யதே।।**

அவர் வேஷதாரியாக மாறிவிடும் அபாயம் இருக்கிறது. ஒரு துறவி தன் உள்ளத்தைத் தூய்மைப்படுத்திக்கொள்ள முற்படும்பொழுது, துறந்துவிட்ட காரணத்தால் அவர் நித்ய கர்மங்களை செய்ய முடியாது.

அதனால் அவருக்கு ஸந்யாஸ ஆச்ரமத்தில் சில சடங்குகளும், ஒழுக்கங்களும் விதிக்கப்படுகின்றன.

துறவிக்கென்று விதிக்கப்பட்ட பல்வேறு சடங்குகளுக்கிடையில் ஒன்று, வ்யாஸ பூர்ணிமா அல்லது குரு பூர்ணிமா பூஜையாகும்.

இது துறவிக்கென்று விதிக்கப்பட்டுள்ள முதன்மையான கடமையாகும். துறவறத்தில் பல வகை இருக்கின்றன.

த்ரிதண்டீ ஸந்யாஸிகள் புறத்தில் பூஜை செய்ய வேண்டும்.

ஏக தண்ட ஸந்யாஸி புறத்தில் பூஜை செய்யத் தேவையில்லை, செய்யவும் கூடாது. அவர் பக்குவமடைந்திருப்பார் என்ற காரணத்தினால், மாநஸிக வ்யாஸ பூஜையை அவர் செய்ய வேண்டும்.

இவ்வாறு புறத்தில் அல்லது அகத்தில் வேத வ்யாஸருக்கு வழிபாடுகள் செய்யப்படுகின்றன. இந்தப் பூஜையோடு சாதுர்மாஸ்ய வ்ரதமும் தொடங்குகிறது.

வர்ணாச்ரம தர்மத்தை கருத்தில் கொண்டால்தான், வ்யாஸ பூஜை மற்றும் சாதுர்மாஸ்ய வ்ரதத்தின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்ள முடியும்.

வேதத்தின்படி, ஒருவர் ஏகதண்ட ஸந்யாஸி ஆகிவிட்டால், அவர் ஓரிடத்தில் தங்கியிருக்கக்கூடாது. அவர் பரிவ்ராஜகராக பல்வேறு இடங்களுக்குச் செல்ல வேண்டும்.

அதனால்தான் பரமஹம்ஸ பரிவ்ராஜக என்ற அடைமொழியுடன் துறவிகளைச் சொல்லும் பழக்கம் இருக்கிறது.

பரமஹம்ஸ ஸந்யாஸிகளுள் இரு பிரிவு இருக்கிறது. அமுக்ய பரமஹம்ஸர் அல்லது விவிதிஷா ஸந்யாஸி, முக்ய பரமஹம்ஸர் அல்லது வித்வத் ஸந்யாஸி.

அமுக்ய பரமஹம்ஸ ஸந்யாஸி ஒரு தண்டத்தை வைத்துக்கொண்டு ஞானயோக ஸாதனைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

ஶ்ரவண, மநந, நிதித்யாஸநம் செய்த பிறகு, அவர் முக்ய பரமஹம்ஸ ஸந்யாஸியாக ஆகிவிடுகிறார்.

அவர் தண்டம் வைத்துக்கொள்ளத் தேவையில்லை என்று சாஸ்த்ரம் கூறுகிறது.

தண்டத்தை விடும்பொழுது, வஸ்த்ரத்தையும் விட்டு அவதூத ஸந்யாஸம் மேற்கொள்ள வேண்டும் என்றும் கூறுகிறது.

இந்தக்காலத்தில் பெரும்பாலான துறவிகள் ஸேவை நிறுவனங்கள் அல்லது ஆச்ரமங்களோடு தொடர்புடையவர்களாக இருக்கின்றனர்.

பரிவ்ராஜகராக இருப்பது ஸாத்தியமில்லாமல் போகிறது.

பிற ஆச்ரமங்களைப் போன்றே துறவறத்திலும் பல ஸமரஸங்கள் செய்துகொள்ளப்பட்டிருக்கின்றன.

பரிவ்ராஜகராக சென்றுகொண்டிருக்கும் துறவி, மழைக்காலம் தொடங்கியவுடன் ஓரிடத்தில் தங்கியிருக்க முடிவுசெய்கிறார்.

மழைக்காலத்தில் சாலையில் புழு பூச்சிகள் அதிகம் இருக்கும், சிறு செடிகள் முளைத்திருக்கும்.

நடந்துசெல்லும்போது, அவற்றின்மீது கால் வைக்க நேரிடும். அதனால் பயணிப்பதை அவர் நிறுத்த வேண்டும்.

அவர் எந்த க்ராமத்தில் தங்குகிறாரோ, அந்த க்ராம மக்களின் உதவியோடு அங்கு குரு பூர்ணிமா பூஜையை அவர் செய்ய வேண்டும்.

முற்காலத்தில் ஒரு துறவியின் குரு பூர்ணிமா பூஜை எந்த ஊரில் நடைபெறும் என்பதை முன்பே முடிவுசெய்ய முடியாது.

ஏனென்றால் பரிவ்ராஜகராக சென்றுகொண்டிருக்கும் துறவிக்கு மழைக்காலத்தில் எந்த ஊரில் இருப்போம் என்பது முன்கூட்டியே தெரியாது.

தற்போதுள்ள காலத்தில் பெரும்பாலான துறவிகள் பரிவ்ராஜகராக இருப்பதில்லை, ஓரிடத்திலேயே தங்கியிருக்கின்றனர்.

அப்படியே சாதுர்மாஸ்ய வ்ரதம் மேற்கொண்டாலும், அது எந்த இடத்தில் என்பது முன்பே முடிவு செய்யப்பட்டுவிடுகிறது. இதில் எது முறை, முறையில்லை என்பதைப்பற்றி நாம் முடிவுசெய்ய முடியாது.

நவீன காலத்திற்கேற்ப, குருபூர்ணிமாவின் முக்கியத்துவத்தை மாற்றியமைத்து அதனைக் கடைப்பிடித்து வருகிறோம்.

ஸ்ரீவேத வ்யாஸருக்கு நன்றி செலுத்துவதற்கென்று இந்த நாளை ஒதுக்கியிருக்கிறோம்.

ஸ்ரீவேத வ்யாஸர் நமக்குச் செய்திருக்கும் உபகாரம் ஸாதாரணமானதன்று.

வேதாந்தத்தைக் கற்பதற்குரிய வழிமுறைகளை அவர் ப்ரஹ்ம ஸூத்ரத்தில் வகுத்துக்கொடுத்திருக்கிறார்.

அவருக்கு நன்றி செலுத்துவதற்கு இந்த நாளை வைத்திருக்கிறோம்.

வேதாந்தத்தைக் கற்பிப்பவர்களும், கேட்டு பயனடைந்து வருபவர்களும் ஸ்ரீவேத வ்யாஸருக்குக் கடன்பட்டிருக்கிறார்கள்.

ஆகவே, குரு பூர்ணிமா தினத்தன்று, ஸ்ரீவேத வ்யாஸர், ஆதி சங்கரர், குருபரம்பரையில் உள்ள குருமார்கள், நம் ஆசார்யர்கள் ஆகிய அனைவரையும் போற்றி வணங்குகிறோம்.

**வ்யாஸாய விஷ்ணுரூபாய வ்யாஸரூபாய விஷ்ணவே।**
**நமோ வை ப்ரஹ்மநிதயே வாஸிஷ்டாய நமோ நம:।।**
**ஶங்கரம் ஶங்கராசார்யம் கேஶவம் பாதராயணம்।**
**ஸூத்ரபாஷ்ய க்ருதௌ வந்தே பகவந்தௌ புந:புந:।।**



ஓம்
ஸ்ரீகுருப்யோ நம:

# குருபூர்ணிமாவின் முக்கியத்துவம்

## பூஜ்யஸ்ரீ ஓங்காரானந்த மஹாஸ்வாமிகள்

சேந்தமங்கலம் தத்தகிரியில் குருபூர்ணிமா அன்று (18.7.2008)
ஆற்றிய அருளுரை

நம் பாரதப் பண்பாட்டில், ஒரு மனிதன் பிறந்ததிலிருந்து இறக்கும்வரை செய்ய வேண்டிய ஸம்ஸ்காரங்கள் (சடங்குகள்) பலவற்றைப் பெரியோர்கள் வகுத்துக் கொடுத்திருக்கிறார்கள். தொன்றுதொட்டு இந்தப் பழக்கங்களை நாம் கடைப்பிடித்து வருகிறோம். பொதுவாக பணம், வசதி, மனைவி, மக்கள் - இவை இருந்தால் இன்பமாக வாழலாம் என்று பலர் நினைக்கிறார்கள். ஆனால், பணத்தைப் பெறவும், அதனைப் பாதுகாக்கவும், நல்ல முறையில் தனக்கும் ஸமுதாயத்திற்கும் பயனுள்ள வகையில் அதனைப் பயன்படுத்தவும் புண்ணியம் தேவை.

புண்ணியம் இல்லாவிட்டால், பணம் இருக்காது; பணம் இருந்தாலும், அது பயனைக் கொடுக்காது. நமக்குப் புண்ணியத்தை அளித்து, நம் மனதைப் பண்படுத்தி, தூய்மைப்படுத்தக்கூடியவை ஸம்ஸ்காரங்கள். இதனை அறிந்த நம் பெரியோர்கள் பூஜைகள், வழிபாடுகள் போன்ற ஸம்ஸ்காரங்களை ஏற்படுத்தினார்கள். நாம் செய்யும் பல பூஜைகளுள் ஸ்ரீவேதவ்யாஸ பூஜை முக்கியமானதொன்றாகும்.

பகவான் ஸ்ரீவேதவ்யாஸர் ஸ்ரீமஹாவிஷ்ணுவின் அவதாரமாகவே கருதப்படுகிறார். (வ்யாஸாய விஷ்ணுரூபாய வ்யாஸரூபாய விஷ்ணவே।). பண்டைக்காலத்தில் அந்தணர்கள் வேதங்கள் முழுவதையும் முறையாக ஓதிவந்தார்கள். காலப்போக்கில் அந்தணர்களின் நினைவாற்றல் குறைய ஆரம்பித்தது. வேதங்களைக் கற்பது சற்று நலிவடைய ஆரம்பத்தது.

அச்சமயத்தில் பகவான் ஸ்ரீவேதவ்யாஸர் அவதரித்தார். அவர்

வேதியர்களின் நிலையைக் கண்டு மனமிரங்கினார். அவர் ரிக், யஜுர், ஸாம, அதர்வண ஆகிய நான்கு வேதங்களையும் முறையே ஸுமந்து, வைஶம்பாயநர், ஜைமிநி, பைலர் ஆகிய நான்கு ரிஷிகளிடம் ஒப்படைத்தார்.

அவர்கள் மூலமாக ஒவ்வொரு குழுவாக ஏற்படுத்தி பரம்பரையாக ஒவ்வொரு பிரிவினரும் ஒரு வேதத்தை மட்டுமோ, ஒரு வேதத்தின் ஒரு பகுதியை மட்டுமோ, ஒன்றுக்கு மேற்பட்ட வேதங்களையோ ஓதும் ஸம்ப்ரதாயத்தை ஏற்படுத்தினார். அவர் இவ்வாறு செய்த ஏற்பாட்டின் காரணமாக இன்றும் வேதங்கள் ஓரளவு காப்பாற்றப்பட்டு வருகின்றன.

வேதவ்யாஸரை நான்கு முகங்களற்ற ப்ரஹ்மதேவர் எனவும், இரண்டு கைகளுடைய மற்றொரு விஷ்ணு எனவும், நெற்றிக் கண்ணற்ற சிவபெருமான் எனவும் போற்றுகிறார்கள். மஹாபாரதமும் பதினெட்டு புராணங்களும் பாகவதமும் ஸ்ரீவ்யாஸரின் திருவாக்கிலிருந்து உதித்தவை.

**வ்யாஸோச்சிஷ்டம் ஜகத் த்ரயம்।** - வ்யாஸரின் சொற்களால் கூறப்படாதவை மூவுலகிலும் இல்லை என்று கூறுவார்கள். இந்த அரிய அறிவுச் செல்வங்களை நமக்கு அளித்த ஸ்ரீவேதவ்யாஸரை ஆடி மாத பௌர்ணமீ அன்று, நன்றியோடு நினைவுகூர்ந்து, பேரன்புடன் போற்றி வழிபடுகிறோம்.

ஸ்ரீவேதவ்யாஸர், ஸுமந்து, வைஶம்பாயநர், ஜைமினி, பைலர் முதலிய ரிஷிகள்; ஸ்ரீக்ருஷ்ணர், வாஸுதேவர், ஸங்கர்ஷணர், ப்ரத்யும்நர், அநிருத்தர் ஆகியோர்; ஸ்ரீகோவிந்த பகவத்பாதர், ஸ்ரீஆதிசங்கரர், அவரது சீடர்களான ஸுரேஶ்வராசார்யர், பத்மபாதர், ஹஸ்தாமலகர், தோடகர் ஆகியோர்; ஸ்ரீஆதிசங்கரரின் உரைகளுக்கு உரை எழுதியவர்கள், த்ரவிடாசார்யர்கள், ஸ்ரீப்ரஹ்மவித்யா ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்த ஆசார்யர்கள், ஸ்ரீதத்தாத்ரேயர், அவதூத குரு பரம்பரையைச் சேர்ந்த ஆசார்யர்கள் ஆகிய அனைவரையும் ஸ்ரீவேதவ்யாஸ பூஜையின்போது வழிபடுகிறோம்.

பண்டைக்காலத்தில் பொதுவாக, துறவிகள் ஓர் இரவிற்குமேல் ஓர் ஊரில் தங்கமாட்டார்கள். ஆனால் மழைக்காலத்தின்போது, சேறும் சகதியுமாக இருப்பதால், பயணம் செய்வது கடினமாக இருக்கும். ஈரமான நிலத்தில் புழு பூச்சிகள் அதிகம் காணப்படும்.

அஹிம்ஸையையே முக்ய வ்ரதமாகக்கொண்ட ஸந்யாஸிகள் நிலத்தில் நடக்க அஞ்சுவர்.

ஆகையால் மழைக்காலம் ஆரம்பமானவுடன் ஓரிடத்திலேயே நான்கு மாதங்கள் தங்குவர். அப்படிப்பட்ட அபயப்ரதானமளிக்கின்ற மஹாத்மாக்களாகிய அத்துறவிகள் எப்பொழுது நம் ஊருக்கு வருவார்கள் என்று மக்கள் ஆவலோடு காத்திருப்பார்கள்.

துறவியானவர், தங்களுடைய ஊருக்கு வந்தவுடன், அவரை வரவேற்று, வணங்கி, உபசரித்து, தாங்கள் இங்கேயே தங்கியிருக்க வேண்டும்; வேண்டிய வசதிகளையெல்லாம் செய்து தருகிறோம் என்று ப்ரார்த்திப்பார்கள்.

துறவி, ஸ்ரீவேதவ்யாஸ பூஜை செய்து, நான்கு மாதங்கள் இங்கு தங்கியிருக்கப் போகிறேன் என்று ஸங்கல்பம் செய்து, சாதுர்மாஸ்ய வ்ரதத்தை அநுஷ்டிப்பார்.

பக்ஷா வை மாஸா:। என்று வேதம் சொல்லியிருப்பதை அநுசரித்து ஸாதுக்கள் நான்கு மாதங்களுக்குப் பதில், நான்கு பக்ஷங்கள் வ்ரதத்தை அநுஷ்டிக்கிறார்கள்.

இந்த வ்ரதத்தில் ஆஹார நியமங்கள் இருக்கின்றன. உணவில், முதல் மாதம் காய்கறி சேர்க்காமலும், அடுத்த மாதம் தயிர் சேர்க்காமலும், அதற்கடுத்த மாதம் பால் சேர்க்காமலும், கடைசி மாதம் பருப்பு சேர்க்காமலும் உணவு உட்கொள்ள வேண்டும்.

ஸம்ப்ரதாய முறைப்படி, இந்த சாதுர்மாஸ்ய வ்ரதத்தை அநுஷ்டிக்கக்கூடிய துறவிகளைப் போற்றி வணங்கி, அவர்களுக்கு பிக்ஷா வந்தநம் முதலியவை அளித்து, அவர்களுக்கு ஸேவை செய்து புண்ணியத்தையும், பேரருளையும் பெற்று, செய்ய வேண்டியதைச் செய்தவர்கள் ஆவீர்களாக!

நீங்கள் அனைவரும் அடைய வேண்டிய பெருநிலையை அடைந்து வாழ்வாங்கு வாழ ஆதிகுரு ஸ்ரீப்ரஜ்ஞா தக்ஷிணாமூர்த்தியையும், ஜகந்மாதா ஸ்ரீபுவநேஶ்வரியையும், ஸ்ரீதத்தாத்ரேயரையும் ப்ரார்த்தனை செய்து மனமார வாழ்த்துகிறேன்.

**ஓம் நமோ நாராயணாய!**